# போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

## போக்குவரத்துப் பிரிவு

## செயல்நிறைவேற்ற அறிக்கை - 2022

07 ஆவது மாடி,
செத்சிறிபாய - II ஆம் கட்டம்,
பத்தரமுல்லை

2023- மே

**உள்ளடக்கம்**

**01.** அத்தியாயம் - தாபன விவரம்/ செயல்முறைப் பொழிப்பு.....03
1.1 அறிமுகம்.....03

1.2 தாபனத்தின் தொலைநோக்கு , பணிக்கூற்று மற்றும் நோக்கங்கள்.....05
1.3 முக்கிய செயல்பாடுகள் மற்றும் பணிகள்.....06
1.4 அமைச்சின் நிறுவன விளக்கப்படம்.....06
1.5 அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்.....07
1.6 அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள்.....07
1.7 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் விபரம்.....10

**02.** அத்தியாயம் - முன்னேற்றம் மற்றும் தொலைநோக்கு.....11

**03.** அத்தியாயம் -**2022** வருடத்துக்காக மொத்த நிதி செயலாற்றுகை.....15
3.1 நிதிச்செயலாற்றுகைப் பற்றிய கூற்று.....15
3.2 நிதிநிலைமை பற்றிய கூற்று.....15
3.3 காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று.....15
3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்.....15
3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை.....15
3.6 ஒதுக்கிடப்பட்ட ஏற்பாடுகளைப் பயன்படுத்தும் செயலாற்றுகை.....15
3.7 நி.பி.குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களத்திற்கு/ மாவட்டச் செயலகத்திற்கு/ மாகாண சபைக்காக வழங்கப்பட்ட ஒதுக்குிட.....16
3.8 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை.....16
3.9 கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை**.....16

**04.** அத்தியாயம்- செயலாற்றுகைக் குறிகாட்டி.....17
4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத்திட்டத்தின் அடிப்படையில்).....17

**05.** அத்தியாயம் - நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் **(SDG)** எய்தப்பெறும் செயலாற்றுகை.....19
5.1 அடையாளம் காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்.....19
5.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்களை.....20

**06. அத்தியாயம்- மனிதவள அபிவிருத்தி விவரம்**;.....23
6.1 ஆளணி முகாமைத்துவம்.....23
6.2 நிறுவனத்தின் செயலாற்றுகையின் பொருட்டு மனிதவள பற்றாக்குறை அல்லது அதிகப்படியான மனிதவளங்கள் பாதிக்கின்ற விதம்.....23
6.3 மனிதவள அபிவிருத்தி.....23

**07.** அத்தியாயம் - .....26

# 01 அத்தியாயம்

## 1.1 அறிமுகம்

பொருளாதார அபிவிருத்திக்கும் மற்றும் மானிட நல்வாழ்வுக்காக தரமான, நம்பகமான, பேரிடர்களை எதிர்க்கக்கூடிய, வினைத்திறன் வாய்ந்த மற்றும் விளைவுபெருக்கம் கொண்ட போக்குவரத்து சேவையை கட்டியமைப்பது தற்போது இன்றியமையாத காரணியாக மாறியுள்ளது. இங்கு போக்குவரத்து அமைச்சின் மூலம் போக்குவரத்து விடயத்துடன் தொடர்பான கொள்கைகளை திட்டமிடுதல், தேசிய வரவுசெலவுத்திட்டம், அரச முதலீடு மற்றும் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழுள்ள கருத்திட்டங்களைச் செயல்படுத்துதல், அமைச்சின் விடயஎல்லைக்குரிய பொதுச் சேவைகளை வினைத்திறன் வாய்ந்த மற்றும் மக்கள் நட்புறவு வாய்ந்த முறையில் வழங்குதல், வீண் விரயம் மற்றும் ஊழலை ஒழிப்பதன் மூலம் அமைச்சின் கடமைப் பங்கை நிறைவேற்றுவதை உறுதிசெய்வதற்கு உதவும் வகையில் நவீன முகாமைத்துவ முறைகள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அனைத்து முறைமைகளையும் புதுப்பிக்கும் பணி நடைபெற்று வருகிறது. போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள அனைத்து நிறுவனங்களின் பங்கேற்புடன் 2022 ஆம் ஆண்டில் பல கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

பொது நலன் மற்றும் பொது பயணிகளின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக போக்குவரத்து முறைமையின் அபிவிருத்தி தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும். இலங்கையில் அவ்வப்போது ஏற்பட்ட பல்வேறு நெருக்கடிகளால் பொதுப் போக்குவரத்துத் துறை விரைவான வீழ்ச்சியைச் சந்தித்தது. இத்தகைய நிலைமைகள் காரணமாக, பயணிகள் பொதுப் போக்குவரத்திலிருந்து விலகி தனியார் போக்குவரத்தை நாடுவதற்கு முற்பட்டனர். எரிபொருள் பற்றாக்குறையினால் பொதுப் போக்குவரத்து சேவைகள் தொடர்வதில் சிக்கல் நிலை ஏற்பட்டிருந்த காலப்பகுதியில் இலங்கை புகையிரத திணைக்களத்தினால் அளப்பற்றிய சேவை வழங்கியது. 2022 ஆம் ஆண்டில், தேசிய போக்குவரத்து அமைப்பில் பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்து நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுத்து இலங்கை புகையிரத சேவை தேசிய போக்குவரத்து அமைப்புக்கு பிரதான வழங்குனராக பங்களிப்பதன் மூலம் திருப்திகரமான பணியில் ஈடுபட்டுள்ளது. புகையிரத சேவையை திறம்பட பேணுவதற்காக, புகையிரத தொகுதியில் சிறு பழுதுபார்ப்புகள், புகையிரத பாதையில் மற்றும் சமிஞை அமைப்பில் பராமரித்தல் மற்றும் சரிசெய்தல் போன்றவற்றை மேற்கொள்வதற்கு தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. பயணிகளின் வசதிக்காகவும், பாதுகாப்பிற்காகவும் புகையிரத மேடைகளை உயர்த்துதல் மற்றும் விரிவாக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டது. கொவிட் -19 தொற்றுநோய் நிலைமைக்குப் பின்னர் 2022 ஆம் ஆண்டில் புகையிரத போக்குவரத்து நடவடிக்கைகள் இயல்பாக்கப்பட்டதுடன் புகையிரத கட்டண அதிகரிப்புடன் ஒப்பிடும்போது பிற போக்குவரத்து சேவை கட்டணங்கள் அதிகரித்ததன் காரணமாக புகையிரத பயணங்கள் மீதான பயணிகளின் ஈர்ப்பு அதிகரிப்பு புகையிரதங்கள் மூலமான வருமான அதிகரிப்பதற்கான முக்கிய காரணமாக அமைந்தது. எரிபொருட்களின் விலையேற்றம் காரணமாக, மக்கள் சரக்கு போக்குவரத்திற்காகவும் புகையிரதங்களின் பக்கம் பெரிதும் சாய்ந்துள்ளதுடன், புகையிரதம் மூலமாக மேற்கொள்ளப்படுகின்ற சரக்கு போக்குவரத்து நடவடிக்கைகளிலும் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணக்கூடியதாகவுள்ளது.

விஞ்ஞான ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட பொதுவான அட்டவணையில் உண்மையான பயணிகளின் தேவையை பூர்த்தி செய்வதற்காக நிபுணத்துவம் வாய்ந்த அரசு பேருந்து சேவை அல்லது தனியார் பேருந்து சேவையை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் மூலம் இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகளுக்கான பொதுவான நேர அட்டவணையை தயாரிக்கப்படும். 2022 ஆம் ஆண்டில், சிறப்பு கவனம் செலுத்தப்பட்டு பல கருத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் செயல்முறைகளை தானியக்கமாக்குவதற்கான கருத்திட்டங்கள், Google தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பொதுப் போக்குவரத்துச் சேவைகளை அறிமுகப்படுத்துதல் (GTFS), நிகழ்நிலை முறையின் மூலம் பேருந்துகளில் இருக்கை முன்பதிவு கருத்திட்டங்கள்,

பேருந்துகளுக்கான GPS சிம் கார்ட்டுகளை வெளியிடுதல் My Bus-SL உள்ளீட்டின் மூலம் GPS பொருத்தப்பட்ட பேருந்துகளைப் பற்றிய நேரடித் தகவல்களைப் பேருந்துப் பயணிகளுக்குப் பார்க்கும் இயலுமையினை வழங்குதல், முன்கொடுப்பனவு அட்டைகளை வழங்கும் முன்னோடிக் கருத்திட்டம் காலி- மாகும்புர அதிவேகப் பாதையில் தனியார் பேருந்துகளில் செயற்படுத்தப்பட்டது. தற்போது Backend மென்பொருளுடன் ஒன்றிணைந்த எந்த வகையான கட்டண முறைக்கும் சந்தர்ப்பத்தினை ஏற்படுத்தியுள்ளது.

பேருந்து தொகுதியின் வளர்ச்சி மற்றும் பேருந்துகளை புனரமைப்பதற்காக 2022 ஆம் ஆண்டு இறுதிக்குள் வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகள் மூலம் 1000 மில்லியன் ரூபா திறைசேரியின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அந்த வருடத்தில் 711.09 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. தேசிய முன் கொடுப்பனவு போக்குவரத்து அட்டைகள் கருத்திட்டத்திற்காக Backend முறைமையினை மேம்படுத்துவதற்கு 2022 ஆம் ஆண்டு ஜுன் மாதம் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டுள்ளது.இதனுடன் சம்பந்தப்பட்ட முன்னோடிக் கருத்திட்டம் மாக்கும்புர-காலி இடையே நடாத்துவதற்கு முன்மொழியப்பட்டது. Backend Application இற்காக 1.5 மில்லியன் ரூபா செலுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் மூலம் மின்னணு அட்டைகள் மூலம் பணம் செலுத்தும் வசதியை வழங்குதல் மற்றும் இலக்கத் தகடுகளை விநியோகிப்பதற்கு எக்ஸ்பிரஸ் கூரியர் முறையை அறிமுகப்படுத்துதல் இந்த திணைக்களம் எய்தப்பெற்ற பிரதான இலக்குகளாகும்.

வீதி பாதுகாப்பு தொடர்பாக பல கருத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. ஐக்கிய நாடுகள் அமைப்பினால் அறிமுகப்படுத்தப்பட்ட 2011-2021 தசாப்தத்தை மீளாய்வு செய்தல் மற்றும் 2021-2030 புதிய சாலைப் பாதுகாப்புப் பத்தாண்டு உடன் இணைந்து ஒரு திட்டத்தைத் தயாரித்தல், வீதி விபத்துக் குறைப்பு பற்றிய ஆராய்ச்சி நடத்துதல், வீதி விபத்து தரவுத்தள முகாமைத்துவ அமைப்பை நிறுவுதல்,கிராமப்புற வீதிகளில் அதிகரித்து வரும் வீதி விபத்துக்களை கட்டுப்படுத்தும் வகையில், மாவட்ட செயலக மட்டத்தில் மற்றும் பிரதேச செயலக மட்டத்தில் கட்டமைப்பை அமைத்தல், மாகாண வீதி பாதுகாப்பு அலகுகள் ஊடாக வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், வனவிலங்கு கடக்கும் இடங்களில் ஓட்டுநர் விழிப்புணர்வு பலகைகளை நிறுவும் நிகழ்ச்சித்திட்டம், புகையிரத கடவைகள், புகையிரத நிலையங்கள் மற்றும் புகையிரத பாதைகளில் விழிப்புணர்வு பலகைகள் நிறுவும் நிகழ்ச்சித்திட்டம், வீதி விபத்துகள் அதிகமாக ஏற்படும் பகுதிகளில் விழிப்புணர்வு பலகைகள் பொருத்துதல். பாடசாலை வீதி பாதுகாப்பு நிகழச்சித்திட்டத்தை செயல்படுத்துதல், வீதி பாதுகாப்பு குறித்த பொது விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தை செயல்படுத்துதல் போன்றவைகளாகும்.

2022 ஆம் ஆண்டில், நாட்டில் நெருக்கடி நிலைமைகள் இருந்தபோதிலும், தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம் 558,032 மருத்துவ பரிசோதனைகளை நடத்தியது. வரையறுக்கப்பட்ட லக்திவ பொறியியல் தனியார் நிறுவனத்தின் மூலம் ஒரு புதிய கருத்திட்டமாக, அரசாங்கத்திற்கு சொந்தமான வாகனங்களுக்கான சேவைகள் வழங்குவதும் இடம்பெறும்.

போக்குவரத்து அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள அனைத்து தாபனங்களுடன் இணைந்து செயல்படுவதன் மூலம் வினைத்திறன் வாய்ந்த மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த பொது போக்குவரத்து அமைப்பிற்காக 2022 ஆம் ஆண்டிற்குள் செயல்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்சசித்திட்டங்களை பட்டியலப்படுத்திக் குறிப்பிட முடியம்.

## 1.2 தாபனத்தின் தொலைநோக்கு , பணிக்கூற்று மற்றும் நோக்கங்கள்

**தொலைநோக்கு**

இலங்கையை பிராந்தியத்தில் பொதுமக்கள் மையமாகக் கொண்ட போக்குவரத்து முறைமையுடன் கூடிய ஒரு நாடாக உருவாக்குதல்

**பணி**

பொதுமக்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தும் பொருட்டு நவீன தொழில்நுட்ப மூலோபாயங்கள் கையாளப்பட்டு மிகவும் உயரந்த போக்குவரத்து உட்கட்டமைப்பு வசதிகளை செயல்படுத்துதல், மேம்படுத்துதல் மற்றும் நிலைபேற்றுடன் முன்னெடுத்துச் செல்லுதல்.

***நோக்கங்கள்***

- பயணிகள், சரக்குப் போக்குவரத்து மற்றும் சுற்றுலா போக்குவரத்து வசதிகளை வழங்குதல்.
- பொதுமக்களின் நம்பிக்கை வென்று மோட்டார் வாகன நெரிசல் மற்றும் வீதி விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக அட்டவணைக்கமைய போக்குவரத்துச் சேவைகளைக் கொண்டு நடாத்துதல்.
- தாபன கட்டமைப்பை வலுப்படுத்துதல்
- நெடுஞ்சாலைகள் மற்றும் புகையிரத வீதிகளுடன் தொடர்புடைய சுற்றாடல் நட்புறவு மற்றும் பயணிகள் நலனோம்பு குறித்து போக்குவரத்து முறைமையொன்றினை நிறுவுதல்
- 1991 ஆம் ஆண்டு 37 ஆம் இலக்கம் கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச்சட்டம் செயல்முறைப்படுத்துதல்
- 1950 இலக்கம் 18 கொண்ட புகையிரத சட்டத்தை செயல்படுத்துதல்
- 2005 இலக்கம் 27 கொண்ட இலங்கை போக்குவரத்து சபை சட்டத்தை செயல்முறைப்படுத்துதல்
- 1997 இலக்கம் 25 கொண்ட தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவன சட்டத்தை செயல்முறைப்படுத்துதல்
- 1951 இலக்கம் 14 கொண்ட மோட்டார் போக்குவரத்து சட்டத்தை செயல்படுத்துதல்
- வேறொரு அமைச்சிற்கு கையளிக்கப்பாத போக்குவரத்து விடயம் கையளிக்கப்பட்டுள்ள அமைச்சுக்கள் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களுக்கு கைளிக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பான ஏனைய அனைத்து சட்டங்களையும் செயல்படுத்துதல்.

## 1.3 முக்கிய செயல்பாடுகள் மற்றும் பணிகள்

இலக்கம் 2289/43 மற்றும் 2022.07.22 திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய போக்குவரத்து துறைக்காக பின்வரும் நடவடிக்கைகள் மற்றும் கடமைப் பாங்குகள் கையளிக்கப்பட்டுள்ளன.

- அரசினால் செயற்படுத்தப்படும் தேசியக் கொள்கைகளின் அடிப்படைக்கமையத் தாபிக்கப்பட்ட போக்குவரத்து விடயத்திற்கு மற்றும் திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனத்தின் விடயங்களுக்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைத் தயாரித்தலும், நடைமுறைப்படுத்தலும் மற்றும் மதிப்பிடுதலும்

- அமைச்சுக்களின் விடய எல்லைக்குள் வருகின்ற பொதுமக்கள் சேவைகளை வினைத்திறமையாகவும் மனிதநேயரீதியிலும் பெற்றுக்கொடுத்தல்.
- வீண்விரயம் மற்றும் ஊழலை ஒழித்துக்கட்டி அமைச்சின் பணிப்பொறுப்பு நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு உதவும் நவீன முகாமைத்துவ முறைகளையும் தொழில்நுட்ப முறைகளையும் பயன்படுத்தி அனைத்து முறைகளையும் திட்டங்களையும் மீளமைப்புச் செய்தல்.
- வாகன நெரிசல்களைக் குறைப்பதற்காக வாகனத் தரிப்பிடங்களை நிறுவுதல்
- பயணிகளுக்கு படகுத்துறைச் சேவைகளை வழங்கல்
- பாதுகாப்பானதும் நம்பகத்தகுந்ததுமான பயணிகள் போக்குவரத்துச் சேவைகளை வழங்குதல்
- சூழல் நேயமிக்க போக்குவரத்து முறைமையொன்றை அறிமுகப்படுத்துதல்
- தனியார் போக்குவரத்துச் சேவைகளை ஒழுங்குபடுத்தல
- பேருந்துகள் உற்பத்தி மற்றும் போக்குவரத்து துறைக்குரிய உள்ளூர் கைத்தொழில் கட்டமைப்பொன்றை ஏற்படுத்துதல்.
- புதிய புகையிரதப் பாதைகளை நிர்மாணித்தல் விரிவாக்குதலும் அதற்குரிய காணிகளை கையகப்படுத்துதலும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளும்
- துறைமுகங்களுக்குப் புகையிரதம் மூலம் பண்டங்களை ஏற்றிச்செல்லும் வசதிகளை ஏற்படுத்துதலும் விஸ்தரித்தலும்
- மோட்டார் வாகனங்களின் பதிவும், அனுமதிப்பத்திரம் வழங்கலும்
- சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கல்
- மோட்டார் வாகனங்களுக்கு உரிய சட்டதிட்டங்கள் மற்றும் வழிகாட்டி நெறிகளை வழங்குதலும் ஒழுங்குபடுத்தலும்
- பச்சைவீட்டு காற்று வெளியேற்றப்படுதலைக் குறைப்பதற்காக போக்குவரத்துத் துறை பங்களிக்கக்கூடிய வகையில் உபாயமுறையிலான நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துதல்
- அமைச்சு மற்றும் அனுசரணை நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அனைத்து விடயங்களுக்குரிய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொளள்ல்
- அமைச்சு மற்றும் அனுசரணை நிறுவனங்களை கண்காணித்தல

## 1.4 அமைச்சின் தாபன கட்டமைப்பு

1.4.1 செத்சிறிபாய வளாகம் - பக்க இலக்கம் 08

1.4.2 மருதானை வளாகம் - பக்க இலக்கம் 09

## 1.5 அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்

- இலங்கைப் புகையிரதத் திணைக்களம்
- இலங்கை மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம்

## 1.6 அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள்

- இலங்கை போக்குவரத்துச் சபை
- தேசிய போக்குவரத்து ஆணைக்குழு
- தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம்
- வீதிப்பாதுகாப்புத் தொடர்பான தேசியசபை
- வரையறுக்கப்பட்ட லக்திவ பொறியியல் (தனியார்)கம்பனி

*1.4* **போக்குவரத்து அமைச்சின் நிறுவன விளக்கப்படம்**

**செத்சிறிபாய வளாகம்**




மேலதிக செயலாளர்
தாபனப் பிரிவு
அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பிரிவு
தொழில்நுட்ப பிரிவு
கணக்குப் பிரிவு
உள்ளக கணக்காய்வுப் பிரிவு
மேலதிக செயலாளர் இநிசே (விசேட)
மேலதிக செயலாளர் இநிசே (விசேட)
பணிப்பாளர் நாயகம் இபொசே (விசேட)
சி.உ.செ. இநிசே 1
சி.உ.செ. (அபிவிருத்தி) இநிசே
பணிப்பாளர் திட்டமிடல் இதிசே SLPS
பணிப்பாளர் பொறியியலாளர் இபொசே 1
பிரதான கணக்காளர் இபொசே
பிரதான உள்ளக கணக்காய்வாளர் (இகசே)
உதவி செயலாளர் இநிசே ii /iii
உதவி பிரதி பணிப்பாளர் இதிசே
உதவி பிரதி பணிப்பாளர் இபொசே iii/ii
கணக்காளர் (இகசே)
உள்ளக கணக்காய்வாளர் (இகசே)
நி.உ
மொழிபெயர்ப்பாளர் 1
அ.உ (07
மு.சே.உ 03
காணொளி பு.பி. 01
காணொளி பு.பி.உ 01
சாரதி 10
அ.ஊ.சே 07
அ.உ 03
மு.சே.உ 01
காணொளி பு.பி.உ 01
அ.உ 03
மு.சே.உ 01
காணொளி
பு.பி.உ 01
அ.உ 03
தொ.உ 01
மு.சே.உ 01
அ.ஊ.சே 01
அ.உ 07
மு.சே.உ 02
அ.ஊ.சே 01
அ.உ 03
மு.சே.உ 01
அ.ஊ.சே 01

## 1.7 வெளிநாட்டு உதவி பெறுகின்ற கருத்திட்டங்கள்

| கருத்திட்டத்தின்பெயர் | நிதிசார் மூலகங்கள் | | கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்டபெறுமதி(ரூபா. மில்.) | ஒருமித்த செலவு( ரூ.மி.) (2022.12.31 திகதியிற்கு) | கால எல்லை | பொழிப்பு கருத்திட்ட முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | உள்நாட்டு : வெளிநாட்டு | நிறுவனம் | | | | % | விபரம் |
| பெரும்பாக கொழும்பு நகர்ப்புற போக்குவரத்து வலையமைப்பினை மேம்படுத்தும் கருத்திட்டங்கள் | உ<br>வெ | (JBIC)<br>இலங்கை அரசாங்கம் | 4,980.0 | 4729.72 | 2009-2013- கட்டம் 1<br>2013-2023 - கட்டம் 2 - | 97% | நகர்ப்புற திட்டங்களை தயாரித்தல் பல்மாதிரி போக்குவரத்து மையங்களைத் திட்டமிடுதல் ஊட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு |
| போக்குவரத்து கருத்திட்டங்களை ஏற்பாடு செய்யும் வசதி (TPPF) | வெ<br>உ | ADB<br>இலங்கை அரசாங்கம் | 1,456.50<br>9,798.08 | 4,836.10 | 2016-2023 | | கருத்திட்டத்துடன் தொடர்புடைய விவைளவுகள் 2021.04.30 திகதியிற்கு நிறைவு செய்யப்பட்டுள்ளன. |
| புகையிரத ஒதுக்கீட்டில் அனுமதியற்ற முறையில் குடியமர்ந்துள்ள நபர்களை மீள குடியமர்த்துதல். | உ | இலங்கை அரசாங்கம் | 9600.00 | 3181.45 | 2016-2025 | 33.14 % | |
| புகையிரத வினைத்திறன் மேம்படுத்தும் கருத்திட்டம் (REIP) | வெ<br>உ | ADB<br>இலங்கை அரசாங்கம் | 28,232.00<br>5,646.40 | 5005.64<br>230.52 | 2019- 2025 | 17.73 %<br>4.08% | |
| மஹவ -ஓமந்தை புகையிரத கருத்திட்டம் | வெ | இந்தியா கடன் உதவி | 91.26 | 12,639.4 | 3 வருடங்கள் | 40%<br>53% | பௌதீக நிதி |
| உலக வங்கி கடன் உதவியின் கீழ் சுகாதார வசதிகளை மேம்படுத்தும் கருத்திட்டம் | வெ | உலக வங்கி | 459.7 | 212.4 | 2 வருடங்கள் | 99% | புகையிரத திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், இபோச மூலம் நிறைவேற்றுள்ள முன்னேற்றம் 95% ஆகும். எஞ்சிய பணிகள் நிறுவன ஏற்பாடுகள் மூலம் மேற்கொள்ளப்படும். |

உ – உள்நாட்டு வெ - வெளிநாட்டு

## 02 அத்தியாயம்

**பயனுறுதி வாய்ந்த மற்றும் வினைத்திறன் வாய்ந்த போக்குவரத்து சேவையை நோக்கி பயணிப்போம்.......**

போக்குவரத்து என்பது நாட்டின் பொருளாதாரத்தில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு முக்கியமான சேவையாகும். முறையான போக்குவரத்து அமைப்பை உருவாக்குவதன் மூலம் ஒரு நாட்டின் அபிவிருத்தி இலக்குகளை அடையும்போது, நெடுஞ்சாலை மற்றும் புகையிரத வீதி முறைமை உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை விரிவாக்கம் செய்தல், வசதியான மற்றும் வினைத்திறமையான பயணிகள் போக்குவரத்து, சுற்றுச்சூழல் பாதிப்புகள், போக்குவரத்து நெரிசல் போன்ற காரணிகள் தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும். பயணிப் பொதுமக்களின் மற்றும் கைத்தொழில்கள் மற்றும் சேவைத் துறைகளின் தேவைகளை நிவர்த்தி செய்வதும் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதும் அதன் மூலம் நாட்டின் அபிவிருத்தி செயல்முறைக்கு பங்களிப்பு செய்வதும் போக்குவரத்து அமைச்சின் பொறுப்பாகும். அந்த நோக்கத்திற்காக, கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் அவற்றை செயல்படுத்துதல், மேற்பார்வை, மதிப்பீடு மற்றும் பின்தொடர்தல் ஆகியவை போக்குவரத்து அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

2022 ஆம் ஆண்டின் முதல் பாதியில் இலங்கை மக்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்த முக்கிய நெருக்கடிகளில் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் எரிபொருள் விலை எதிர்பாராத அதிகரிப்பு ஆகியவை அடங்கும். இதன் காரணமாக தனியார் வாகனங்கள் மாத்திரமன்றி மாற்று போக்குவரத்து சேவைகள் தொடர்ந்தும் கொண்டு பல சிக்கல்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்ததுடன் இங்கு பல்வேறு கட்டுப்பாடுகளின் கீழ் பொது போக்குவரத்து சேவைகள் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் பேணப்பட்டது. எனவே, மக்கள் தங்கள் பயணத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அதிகளவில் பொதுப் போக்குவரத்துச் சேவைகளை நாட வேண்டியேற்பட்டன.

பொருளாதார மேம்பாடு மற்றும் மனித நல்வாழ்வுக்கான தரமான, நம்பகமான மற்றும் பேரழிவை எதிர்க்கும் போக்குவரத்து சேவையை கட்டியமைப்பதில் புகையிரத திணைக்களத்திற்கு முக்கிய பங்கு உள்ளது. தற்போதுள்ள புகையிரத வலையமைப்பை மேம்படுத்தும் கருத்திட்டங்கள், மஹவ முதல் ஓமந்தே வரை புகையிரத பாதை புனரமைப்பு கருத்திட்டம் மற்றும் பெரும்பாக கொழும்பு புறநகர் புகையிரத திட்டம், இந்திய கடன் திட்டத்தின் கீழ் புகையிரதக் தொகுதியினை வலுப்படுத்துவற்காக புதிய புகையிரத பெட்டிகளை கொள்வனவு செய்தல், உள்ளூர் நிதியில் பயணிகள் பெட்டிகளை புனரமைத்தல் மற்றும் புகையிரத தொகுதியின் தொடர்ச்சியான பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் பேருந்துகள் மூலம் அளிக்கப்படுகின்ற பயணிகள் போக்குவரத்து சேவையின் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக இந்திய கடன் உதவியின் கீழ் 200 பேருந்துகளை இறக்குமதி செய்து சேவையில ஈடுபடுத்துதல். பயணிகள் வசதி மற்றும் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளித்து புகையிரதத்தில் நுழைவதற்கும் வெளியேறுவதற்கும் வசதியாக புகையிரத மேடைகளை உயர்த்துதல் மற்றும் நீடிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளல் மற்றும் சிறப்புத் தேவையுடையவர்களுக்கான அணுகல் வசதிகள் முதலியன விரிவாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கை மக்களுக்கு பாதுகாப்பான, வசதியான மற்றும் நம்பகமான பயணிகள் போக்குவரத்து சேவையை நியாயமான கட்டண முறைமையின் கீழ் வழங்குவதன் மூலம் அரசாங்க துறையின் பங்களிப்போடு எழுந்து நிற்கும் மக்களின் நட்புறவு நிறுவனமாக இலங்கை போக்குவரத்து சபையை குறிப்பிட முடியும். இந்த நிறுவனத்தின் மூலம் இலங்கையின் அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கும் வகையில் அதன் சேவைகளை தொடங்குவதன் மூலம் மக்களுக்கு பல சேவைகளை வழங்குகிறது. இபோச மற்றும் புகையிரத ஒருங்கிணைந்த சேவையை முறைசார்படுத்தி விரிவுபடுத்துதல், தொலைபேசி அழைப்புகள் மூலம் பேருந்துகளில் இருக்கைகளை முன்பதிவு செய்யும் வசதியினை ஏற்படுத்துதல், காலவரைப் பயணச் சீட்டு

சேவைகள், இணையான பயணிகள் சேவைகள், அவசரகால கோளாறுகள் ஏற்பட்டால் இபோச சேவைகள், மஹரகமை ‘‘அபேக்ஷா’’ மருத்துவமனைக்கு விசேட பேருந்து சேவையைத் தொடங்குதல். ‘‘பேருந்து நூலகசாலை” கருத்திட்டம், ‘‘Park & Ride’’ கருத்திட்டம் போன்றவை இபோசபையின் மூலம் வழங்கும் முக்கிய சேவைகளாகும். உலக வங்கி உதவியுடன் புகையிரத நிலையங்கள் மற்றும் பேருந்து டிபோக்களில் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்காக கருத்திட்டம் (CERC கருத்திட்டம்) செயல்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் போக்குவரத்து ஊடகங்களை ஒழுங்குபடுத்துதல் மற்றும் பேருந்துகள் மூலம் பயணிகளை கொண்டு செல்வது தொடர்பான தேசிய கொள்கை தொடர்பாக அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் அந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சட்டத்தின் மூலம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நிறுவப்பட்டுள்ளது.தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சட்டத்தால் வழங்கப்பட்ட அதிகாரங்கள் மற்றும் பணிகளுக்கு இணங்க, இலங்கை மக்களுக்கு வினைத்திறன்வாய்ந்த, உயர் தரமான சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் வசதியான போக்குவரத்து சேவையை வழங்குவதற்கும் மற்றும் நவீன போக்குவரத்தை உருவாக்குவதற்கும் பல்வேறு கருத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

வசதிகள் குறைந்த பிரதேசங்களில் உள்ள மக்களின் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் சமூக நலப் பேருந்து சேவையான ‘‘சிசு செரிய” மற்றும் ”நிசி செரிய” சேவைகள் இயங்கி வருகின்றன. புதிய ‘‘சிசு செரிய’’ 52 சேவைகள், புதிய ‘‘நிசி செரிய’’ 25 சேவைகள் 2022 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டன. சிசு செரிய மூலம் பாடசாலை மாணவர்களுக்கு பாதுகாப்பான மற்றும் நம்பகமான பொது போக்குவரத்து சேவையை வழங்குவதுடன் செயல்பாட்டில் உள்ள சிசு செரிய சேவைகளின் மொத்த எண்ணிக்கை 1,617 ஆகும். நிசி செரிய சேவை, இரவுநேர மற்றும் விடியற்காலையில் பயணிகளின் போக்குவரத்து வசதிகளை பூர்த்தி செய்யும் வகையில் செயற்படுவதுடன் செயற்படுகின்ற நிசி செரிய சேவைகளின் மொத்த எண்ணிக்கை 216 ஆகும். எந்தவித பேருந்து சேவையும் இயக்கப்படாத, சமூக ரீதியாக பேருந்து சேவை தேவையாக இருப்பினும் பொருளாதார ரீதியாக இலாபமற்ற வீதிகளாக இருப்பதால் பயணிகள் போக்குவரத்திற்காக ஓட்டுநர்கள் முன்வராத கிராமிய பிரதேசங்களில் வாழுகின்ற மக்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக ‘‘கெமி செரிய’’ பேருந்து சேவை செயல்படுத்தப்படுவதுடன் செயல்படுத்தப்பட்ட மொத்த சேவைகளின் எண்ணிக்கை 13 ஆகும்.

ஆராய்ச்சி முடிவுகளின் அடிப்படையிலான நவீன தொழில்நுட்பம் இந்த நாட்டுக்கு ஏற்றவாறு பொது போக்குவரத்தின் மேம்பாட்டிற்காக பயன்படுத்தப்பட வேண்டும். போக்குவரத்துத் துறையைப் பற்றிய ஆராய்ச்சி அறிவை போக்குவரத்துத் துறைக்கு வழங்குவதற்காக ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தரப்பினர்களிடையே சிறந்த ஒருங்கிணைப்பு மற்றும் தொடர்பை கட்டியமைப்பது இதற்கு மிகவும் முக்கியமானதாகும்.அங்கு பொது போக்குவரத்து சேவைக்கான நவீன தொழில்நுட்ப அறிமுகத்தின் கீழ் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் செயல்முறைகளை தானியக்கமாக்குதல், Google (கூகுள்) தொழில்நுட்பத்தினூடாக பொது போக்குவரத்து சேவை தகவல்களை வழங்குதல், MyBus-SL உள்ளீட்டை அறிமுகப்படுத்துதல், பேருந்துகளுக்கு GPS பொருத்துதல் மற்றும் நிகழ்நிலை இருக்கை முன்பதிவு போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் இந்த ஆண்டில், மாகும்புர பல்மாதிரி போக்குவரத்து நிலையத்தின் மூலம் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்கும் மாகும்புர - காலி பேருந்துகளுக்காக முன்கொடுப்பனவு அட்டை முறையை அறிமுகப்படுத்தியது.

இலங்கைக்குள் மோட்டார் வாகனப் பதிவு, ஒழுங்குமுறை, சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கல், வீதிப் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த வாகனங்களைப் பயன்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் வினைத்திறன் வாய்ந்த மற்றும் விளைவுபெருக்கம் கொண்ட சேவையை வழங்குவதற்காக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

அனைத்து மாவட்ட அலுவலகங்கள் நிகழ்நிலை (online) தொடரர்பின் மூலம் நாரஹேன்பிட்டியில் உள்ள தலைமை அலுவலகத்துடன் இணைவதன் மூலம், கிராமப்புற/பிராந்திய மட்டத்தில் வாடிக்கையாளர்களின் தேவைகளை நிறைவேற்றி, நவீன வசதிகள் மற்றும் புதிய தொழில்நுட்பத்தின் மூலம் வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகளை எளிதாக்குவது திணைக்களத்தின் எதிர்கால அபிலாஷைகளில் முக்கியமானதாகும். இந்த அமைச்சின் மூலம், வழங்கப்படும் சேவைகளுக்காக இலத்திரனியல் அட்டைகள் மூலம் பணம் செலுத்தும் வசதியை வழங்குதல், இலக்கத் தகடுகளை விநியோகிப்பதற்கு விரைவு விநியோக (கூரியர்) முறையை அறிமுகப்படுத்துதல் போன்ற இலக்குகளை இந்த அமைச்சு எட்டியுள்ளது. 2022 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்ட ஓட்டுநர் உரிமங்களின் எண்ணிக்கை 125,250 ஆகும். பதிவு செய்யப்பட்ட புதிய வாகனங்களின் எண்ணிக்கை 20,510 மற்றும் வாகன கைமாற்றங்களின் எண்ணிக்கை 612,877 ஆகும்.

”அனைவருக்கும் பாதுகாப்பான வீதி அமைப்பு” என்ற தொலைநோக்குப் பார்வையின் அடிப்படையில் வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை தாபிக்கப்பட்டுள்ளது. வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை ”தேசிய போக்குவரத்து பாதுகாப்பு பற்றிய ஆணைக்குழு” என நிறுவுவதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருப்பதுடன், அதற்கான சட்டமூலம் தயாரிக்கப்பட்டு, சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதேபோன்று, 2021-2025 காலப்பகுதியில் வீதி விபத்துகளை குறைப்பதற்காக சம்பந்தப்பட்ட தரப்பினர்களின் பங்களிப்புடன் ஐந்தாண்டு செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. 150 மில்லியன் ரூபா பெறுமதியான லேசர் ஸ்பீடோமீட்டர், டார்க் கிளாஸ் பரிசோதனை லுமினஸ் மீட்டர், ஒலி சோதனை மீட்டர் போன்ற தொழில்நுட்ப உபகரணங்கள் இலங்கை போக்குவரத்து பொலிஸாருக்கு வழங்குவதற்கு நடவடிக்கையெடுத்துள்ளது. அத்துடன், போதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளை அடையாளம் காணும் உபகரணத்தொகுதிகளை கொள்வனவு செய்வதற்குத் தேவையான 10 மில்லியன் ரூபா இலங்கை பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்து சபையின் மற்றும் தனியார் பேருந்து உரிமையாளர்களின் உருக்குலைந்த பயணிகள் பேருந்துகள் சலுகை விலையில் உயர்ந்த தரத்தில் பழுதுபார்க்கப்பட்டு இயக்கத்துக்கு இணைப்பதற்காக லக்திவ பொறியியல் நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. 2001 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை இலங்கைப் பேருந்துகளின் பேருந்து உடம்புகளின் பழுதுபார்க்கும் பணியை மட்டுமே மேற்கொண்ட இந்த நிறுவனம் 2021ஆம் ஆண்டில் அரசாங்கத்திற்குரிய அனைத்து வாகனங்களின் பழுதுபார்ப்புகள் மற்றும் சேவைகளை மேற்கொள்வதற்காக நவீன இயந்திரங்கள் பொருத்தப்பட்ட வாகன சேவை மையம் நிறுவப்பட்டது.

தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவனம் கொழும்பில் உள்ள தலைமை அலுவலகத்தையும், நாடு பூராவுமுள்ள 25 மாவட்ட அலுவலகங்களையும் கொண்டுள்ளது. அனைத்து ஓட்டுநர் உரிம விண்ணப்பதாரர்களுக்கும் தரமான மருத்துவ பரிசோதனைகளை நடத்தி உடல் மற்றும் உள ரீதியிலான பொருத்தப்பாடு பற்றிய உறுதிப்பாட்டினை வழங்குவது இந்த நிறுவனத்தின் முக்கிய பணியாகும். 2022 ஆகஸ்ட், மொத்தம் 558,032 மருத்துவப் பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும் இற்றைப்படுத்திய தேசிய தரைப் போக்குவரத்துக் கொள்கையொன்றின் தேவைப்பாடு இந்த ஆண்டிற்குள் அத்தியவசிய தேவைப்பாடாக இருப்பதைக் காணக்கூடியதான இருந்தது. நெருக்கடியான காலங்களில் மக்களின் போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் குறித்து சரியான நேரத்தில் முடிவுகளை எடுப்பதற்கான போக்குவரத்து கொள்கையொன்றில் உள்ள தேவை நன்கு பிரதிபலித்தது. எனவே, பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்தின் அனைத்து பரிமாணங்களுக்கும் தீர்வு காண தற்போதுள்ள போக்குவரத்து கொள்கையை இற்றைப்படுத்தும் பணி 2022 ஆம் அண்டில் தொடங்கப்பட்டது.

பொதுப் போக்குவரத்துச் சேவைக்கு அதிகமான மக்களை ஈர்ப்பது இந்த அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள ஒரு பெரிய சவாலாக இருப்பதுடன், மேலும் மக்கள் நட்புறவு வாய்ந்த, வசதியான, வினைத்திறன் வாய்ந்த மற்றும் சரியான நேரத்தில் போக்குவரத்து சேவையை செயல்படுத்துவதன் மூலமே அதை வெற்றிகரமாக எதிர்கொள்ள முடியும். எனவே, இலங்கையில் போக்குவரத்துத் துறை தொடர்பாக நிறுவப்பட்டுள்ள இந்த நிறுவனங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து, அவற்றின் நடவடிக்கைகளுக்கான வழிகாட்டுதல் மற்றும் மேற்பார்வை செய்வதன் மூலம் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு இலங்கை போக்குவரத்துத் துறையின் முன்னோடியாக செயல்படுகிறது.

**எம். எம். பி. கே. மாயாதுன்னெ**
**செயலாளர்**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சு**

## 03 அத்தியாயம்

## 2022 திசெம்பர் 31 ஆம் திகதி முடிடைந்த வருடத்துக்கான ஒட்டு மொத்த நிதிச்செயலாற்றுகை

### 3.1 நிதிச் செயலாற்றுகைப் பற்றிய கூற்று

### 3.2 நிதிநிலைமை பற்றிய கூற்று

### 3.3 காசுப்பாய்ச்சல் பற்றிய

* மேலே குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கைகள் சம்பந்தப்பட்ட தொடர்புடைய தகவல்கள் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் நெடுஞ்சாலைகள் பிரிவால் உள்ளிடப்பட்டுள்ளன.

### 3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

-

### 3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை

| வருமான குறியீடு | வருமான குறியீட்டின் விபரம் | வருமானமதிப்பீடு | | சேகரிக்கப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | அசல் மதிப்பீடு (மி.ரூபா) | இறுதி மதிப்பீடு (மி.ரூபா) | தொகை (மி.ரூபா) | இறுதி வருமான மதிப்பீடு % ஆக |
| 20.03.99.00 | ஏனைய கிடைப்பனவுகள் | 43.75 | 43.75 | 24.21 | 55.34 |
| 20.02.02.99 | அ.ஊ.மு.பி.வட்டி | 1.42 | 1.29 | 1.09 | 84.50 |
| 20.03.03.02 | அபராதம் மற்றும் பறிமுதல் | 1.00 | 1.00 | 0.06 | 6.00 |
| 20.02.01.01 | வீட்டு வாடகை | 1.42 | 1.29 | 0.11 | 8.53 |
| 20.06.02.02 | மூலதனச் சொத்துக்களின் விற்பனை (மற்றவை) | 0.51 | 0.36 | 0.48 | 133.34 |

### 3.6 ஒதுக்கீட்டுப்பயன்பாட்டின் செயலாற்றுகை

| **ஒதுக்கீட்டுவகை** | **ஒதுக்கீடு (ரூ)** | | **உண்மையான செலவினம்** | **பயன்படுத்தப்படட ஒதுக்கீடு, முடிவு செய்யப்பட்ட இறுதி ஒதுக்கீட்டு அளவின் % ஆக** |
|---|---|---|---|---|
| | **அசல் ஒதுக்கீடு** | **இறுதி ஒதுக்கீடு** | | |
| மீணடெடும் | 10,726,020,000 | 10,726,020,000 | 9,914,581,902.21 | 92.43 |
| மூலதனம் | 3,935,500,000 | 3,935,500,000 | 3,867,411,276.82 | 98.27 |

### 3.7 நி.பி.குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம் / மாவட்டச்செயலகம் / மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு

| தொ/இல. | அமைச்சு/ திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட ஒதுக்கீடு | ஒதுக்கீட்டு நோக்கம் | ஒதுக்கீடு (ரூபா) | | உண்மையான செலவினம் ரூபா (ரூ) | பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடு, வழங்கிய இறுதி ஒதுக்கீடுகளின் % ஆக |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆரம்ப ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| 01 | குருநாகல் மா/செ | குருணாகல் - ஹபரணை கருத்திட்டத்துக்காக காணிகளை கையகப்படுத்துதல் மற்றும் நிர்வாகச் செலவினங்களை ஏற்பதற்காக | 3,250,000 | 3,250,000 | 3,250,000 | 100 |
| 02 | அனுராதபுரம் மா/செ | | 450,000 | 450,000 | 449,947.55 | 100 |
| 03 | பொலன்னறுவை மா/செ | | 350,000 | 350,000 | 350,000 | 100 |
| 04 | மாத்தளை மா/செ | | 2,000,000 | 2,000,000 | 1,846,599.13 | 92 |

### 3.8 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை

| ஆதன குறியீடு | குறியீட்டு விபரம் | 31.12.2022 திகதியிற்கு சரக்கு ஒப்பாய்வு அறிக்கைக்கமைய மீதி | 31.12.2022 திகதியிற்கு நிதி நிலைமை அறிக்கை படி மீதி | எதிர்காலத்தில் கணக்கிட வேண்டியது | அறிக்கையிடல் முன்னேற்றம் % |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டிடம் மற்றும் கட்டமைப்பு | இதற்கான இறுதி அறிக்கையை நெடுஞ்சாலைகள் அமைச்சின் மூலம் முன்வைக்கப்படும். அதுவரை போக்குவரத்து பிரிவு தொடர்பான தரவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. | | | |
| 9152 | இயந்திரம் மற்றும் உபகரணம் | | | | |
| 9153 | காணி | | | | |
| 9154 | அருவச் சொத்துக்கள் | | | | |
| 9155 | உயிரியல் சொத்துக்கள் | | | | |
| 9160 | நடைபெறும் பணிகள் | | | | |
| 9180 | குத்தகை சொத்துக்கள் | | | | |

### 3.9 கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை **

** பாராளுமன்றத்திற்குச் சமர்பிக்கும்போது, கணக்காய்வாளர் தலைமையதிபதியின் மூலம் வெளியிடப்பட்ட இறுதி கணக்காய்வு அறிக்கை - **போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் நெடுஞ்சாலைகள் பிரிவால் முன்வைக்கப்படுகின்றது.**

## அத்தியாயம் 04

## செயலாற்றுகை சுட்டிகள்

### 4.1 நிறுவனத்தின் செயலாற்றகைச் சுட்டிகள் (செயல்பாட்டுத்திட்டத்தின் அடிப்படையில்)

| குறிப்பீட்டு சுட்டிகள் | எதிர்பார்த்த வெளியீட்டின்சதவீதமாக(%) உண்மையான வெளியீடு | | | |
|---|---|---|---|---|
| | 100 - 90% | 89- 75% | 74 - 50% | 49 - 0% |
| **புகையிரத பிரிவு** | | | | |
| ➢ சரக்கு போக்குவரத்து புகையிரத எண்ணிக்கை | ✓ | | | |
| ➢ தினசரி செயற்படுத்தப்படுகின்ற புகையிரத எண்ணிக்கை | ✓ | | | |
| ➢ நிர்மாணிக்கப்பட்ட புகையிரதவீதி (நீளம் கி.மீ) | ✓ | | | |
| **பேருந்துப் போக்குவரத்து** | | | | |
| ➢ நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய சிசுசெறிய பேருந்து சேவைகளின் எண்ணிக்கை | | | ✓ | |
| ➢ நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய நிசிசெறிய பேருந்து சேவைகளின் எண்ணிக்கை | | | | ✓ |
| ➢ புதிய தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட சேவைகளின் எண்ணிக்கை | | | | ✓ |
| ➢ வருடமொன்றுக்கு பயிற்றுவிக்கப்பட்ட பேருந்து பதவியணி எண்ணிக்கை | | ✓ | | |
| ➢ செயல்படுத்தப்பட்ட அட்டவணை எண்ணிக்கை (ஒருங்கிணைந்த மற்றும் ஒருங்கிணைக்கப்படாத) | | | ✓ | |
| ➢ பொருத்தப்பட்ட சமிஞை பலகைகளின் எண்ணிக்கை | | | | ✓ |
| ➢ போக்குவரத்து தொடர்பான தரப்பினர்களை விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் | | | ✓ | |
| ➢ தேசிய போக்குவரத்து புள்ளிவிவர அறிக்கைகள் தயாரித்தல் | ✓ | | | |
| ➢ பொதுமக்கள் முறைப்பாடுகள் தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை | | ✓ | | |
| **மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம்** | | | | |
| ➢ பௌதீக வள அபிவிருத்தியின் கீழ் கட்டுமானம் மற்றும் பழுதுபார்ப்புகளின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் | ✓ | | | |
| ➢ நிலையான சொத்துக்களை கையகப்படுத்துவதன் கீழ் வன்பொருள் மற்றும் மென்பொருள் கையகப்படுத்துதலின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் | ✓ | | | |
| ➢ மனித வள மேம்பாட்டிற்காக மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை மற்றும் அதன் நிதி முன்னேற்றம் | ✓ | | | |
| ➢ மூலதன முதலீட்டின் கீழ் வழங்கப்பட்ட ஓட்டுநர் உரிமங்களின் அளவு மற்றும் அதற்கான செலவினம் | | | ✓ | |
| **தேசிய வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை** | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| ➢ வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை ஆணைக்குழுவாக மாற்றம் செய்தல் | | | ✓ | |
| ➢ ஐக்கிய நாடுகள் அமைப்பின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட 2011-2021 மீளாய்வு மற்றும் 2021-2030 புதிய சாலை பாதுகாப்பு தசாப்தத்திற்கு ஏற்ப ஒரு திட்டத்தை தயாரித்தல். | | | | ✓ |
| ➢ மோட்டார் சைக்கிள் விபத்துகளை குறைப்பது குறித்து ஆய்வு நடத்துதல் | | | ✓ | |
| ➢ இலங்கையில் ஏற்படுகின்ற பாதசாரி விபத்துக்களை குறைப்பது குறித்து ஆய்வுகளை மேற்கொள்ளுதல் | | | | ✓ |
| ➢ வீதி விபத்து தரவு முகாமைத்துவ முறைமையை நிறுவுதல் | | | | ✓ |
| ➢ வீதி பாதுகாப்பு குறித்த மின் நூலகத்தை இற்றைப்படுத்துதல் | ✓ | | | |
| ➢ கிராமப்புற வீதிகளில் அதிகரித்து வரும் வீதி விபத்துக்களை கட்டுப்படுத்த மாவட்ட செயலக மட்டத்திலும் செயலக மட்டத்திலும் கட்டமைப்பை அமைத்தல். | | | | ✓ |
| ➢ வீதி பாதுகாப்பு தேசிய வாரம் தொடர்பான திட்டங்களை செயல்படுத்துதல் | ✓ | | | |
